செ.வெ.எண்.09 நாள்:08.05.2020

# நீலகிரி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக, கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் இன்று (08.05.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், நீலகிரி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள மண்டல சிறப்பு கண்காணிப்புக்குழு மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் திரு.A.ஞானசேகரன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக, சென்னை கோயம்பேடு மார்கெட் பகுதிக்கு சென்று வந்த ஓட்டுநர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ததில் 4 நபர்களுக்கு கொரோனா நோய் தொற்று உறுதி செய்யப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளான உதகை நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட கக்கன்ஜி காலனி, கீழ்கோழிக்கரை ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள், காய்கறிகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றதா எனவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பொருட்டு தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள வைட்டமின் சி மாத்திரை, ஜிங்க் மாத்திரை, கபசுரகுடிநீர் தொடர்ந்து வழங்கப்படுகின்றதா எனவும், இப்பகுதியில் பணிபுரியும் மருத்துவர்கள், சுகாதாரப்பணியாளர்கள், தூய்மை காவலர்கள் ஆகியோர் கையுறை, முககவசங்கள் அணிந்து பணியாற்ற வேண்டும் எனவும், இப்பகுதியில் சுகாதாரத்துறையின் மூலம் தொடர்ந்து 28 நாட்கள் கண்காணிக்கப்படும்.சளி, இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவர்களுக்கு கொரோனா நோய் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

பின்னர் அப்பகுதி விவசாயிகள் தங்கள் தோட்டங்களுக்கு சென்று பயிரிடுதல், களைஎடுத்தல், அறுவடை செய்தல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என தெரிவித்ததை தொடர்ந்து, இவர்களுக்கு உதவிடும் வகையில் வெளியாட்களை கொண்டு தொய்வின்றி இப்பகுதி விவசாயிகளின் தோட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட சேலாஸ் பகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட இடத்தினை பார்வையிட்டு, இப்பகுதியில் ஒரு நாளைக்கு மூன்று முறை கிருமி நாசினிகள் தெளிக்கப்படுகின்றனவா எனவும், பொது மக்கள் முக கவசங்களை பயன்படுத்துகின்றனரா, அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்கப்படுகின்றதா என மண்டல சிறப்பு கண்காணிப்புக்குழு மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் அவர்கள் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இவ் ஆய்வின் போது குன்னூர் சார் ஆட்சியர் திரு.ரஞ்சித்சிங்,இ.ஆ.ப., உதகை வருவாய் கோட்டாட்சியர் மரு.சுரேஷ், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பாலுசாமி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி.மனோரஞ்சிதம், உதவி இயக்குநர்(கலால்) திரு.பாபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கணேஷ், உதகை வட்டாட்சியர் திரு.ரவி, குன்னூர் வட்டாட்சியர் திரு.குப்புராஜ், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ரமேஷ்கிருஷ்ணன், திரு.சந்திரசேகரன் உட்பட மருத்துவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.